# சீர்காழி நகராட்சி



2020 –ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14.12.2020 திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி .P.தமிழ்ச்செல்வி.BA
தனி அலுவலர் (ம) ஆணையர்,
சீர்காழி நகராட்சி.

பொருள் ண்-1

சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 இன் கீழ் ரூ.400 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மராமத்து பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 20557/2020/இ3 நாள் 11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| சீர்காழி | 4.00 | 3.60 | 0.40 |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | **வார்டு எண்.1** புளிச்சக்காடு வடக்கு தெரு , இனாம்குணதலபாடி, **வார்டு எண்.2** MSK நகர் , தவசி நகர் , வீரம்மாள் நகர் , சுந்தராம்பாள் நகர் , பெரியவகுப்பு கட்டளை தெரு , **வார்டு எண்.9** கல்யாணிசீனிவாசபுரம் , **வார்டு எண்.14** திருஞானசம்பந்தர் தெரு , **வார்டு எண்.16** மொன்னையன் மேட்டு தெரு , அண்ணா நகர் , **வார்டு எண்.18** VNS நகர் , **வார்டு எண்.21** சாய்பாபா கார்டன். ஆகிய இடங்களில் தார் சாலைசீரமைக்கும் பணி. | 3.333 | 4.10 | 200.00 |
| 2 | **வார்டு எண்.18** போலிஸ் ஸ்டேஷன் ரோடு , **வார்டு எண்.19** PMR கிழக்கு தெரு , **வார்டு எண்.20** இந்திரா நகர் , RVS நகர் , **வார்டு எண்.21** VOC நகர் குறுக்கு தெரு , சர்வமானிய தெரு , கணபதி நகர் விரிவாக்கம் , வீரம்மாள் நகர் , **வார்டு எண்.22** பனமங்கலம் வடக்கு தெரு , **வார்டு எண்.24** முத்து நகர் , மதினா நகர் , ஸ்ரீ நகர். ஆகிய இடங்களில் தார் சாலைசீரமைக்கும் பணி. | 3.245 | 4.10 & 6.00 | 200.00 |
| | மொத்தம் | 6.578 | | 400.00 |

நகர்மன்ற தீர்மான எண்–554
நாள்.14.12.2020
அனுமதிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | <u>அலுவலககுறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்–3337/2020 /இ1 | |

(ஒம்)முன்னிலை. திருமதி .P.தமிழ்ச்செல்வி.BA
தனி அலுவலர் (ம) ஆணையர்,
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி

/உண்மை நகல்/

நாள்–14.12.2020

ஆணையர்,
சீர்காழி ந கராட்சி.

# சீர்காழி நகராட்சி



2020 –ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23.12.2020 புதன் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி .P.தமிழ்ச்செல்வி.BA
தனி அலுவலர் (ம) ஆணையர்,
சீர்காழி நகராட்சி.

பொருள் எண்-1

சீர்காழி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு விட்டதால் தேவைப்படும் Exdie Express RV/ 1300 வாட் பேட்டரி ஒன்றினை புதியதாக மாற்றுவதற்கு விலைப்புள்ளி கோரியதில் 18.12.2020 அன்று கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன .

| வ எண் | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | காளீஸ் டயர்ஸ், 26 , கச்சேரி ரோடு சீர்காழி . | 12V/XP 1300 Exdie Express Battary ஒன்றின் விலை ரூ.11,650/– |
| 2. | சரண் பேட்டரிஸ், சட்டநாதபுரம் , காம்ளக்ஸ் No 3, திட்டை ரோடு, தென்பாதி , சீர்காழி . | 12V/XP 1300 Exdie Express Battary ஒன்றின் விலை ரூ.11,800/– |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள காளீஸ் டயர்ஸ் 26 , கச்சேரி ரோடு சீர்காழி , என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அலுவலக குறிப்பு) 1.அனுமதி வழங்கலாம்

2.அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் பணிஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2822/2020/ H1

நகர்மன்ற தீர்மான எண்–555
நாள்.23.12.2020
அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்-2

சீர்காழி நகராட்சி – தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணிகள் பராமரித்திட தூய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு மாஸ்க் (முகக் கவசம்) 2000 வாங்கவும் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–இன் கீழ் பணிகள் மேற்கொள்ளவும் பணிஆணை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அலுவலக குறிப்பு) 1.அனுமதி வழங்கலாம்

2.அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் பணிஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1034/2020/ H1

நகர்மன்ற தீர்மான எண்–556
நாள்.23.12.2020
அனுமதிக்கப்படுகிறது.

பொ ருள் ண்-3

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்–20452/2020/LA3, நாள்–10.11.2020 இன் படி படி 15 வது மத்திய நிதி குழு (15CFC) திட்டத்தின் கீழ் 2020–21 ஆம் ஆண்டு Tied grant இல் நகர்ப்புங்களில் மேற்கொள்ளப்பட உள்ள சேவை பணிகளுக்கு Tied Grant to Non- Million Plus Cities 2020–2021 ஆம் ஆண்டிற்கான குடிநீர் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் மேற்கொள்ள முதல் தவனை தொகையாக ரூ.5424611/– விடுவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது .

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஈசானியத் தெரு குப்பை கிடங்கில் புதிய 2.5 TPD உலர் கழிவு எரிப்பு ஆலை (DryWaste Incinerator Plant) அமைக்கும் பணி. | 25.00 |
| 2 | ஈசானியத் தெரு குப்பை கிடங்கில் குப்பைகளை அரைப்பதற் Shreeding Machine , Conveyar Belt மற்றும் Baling Machine கொள்முதல் செய்யும் பணி. | 10.00 |
| 3 | ஈசானியத் தெரு குப்பை கிடங்கில் குப்பைகள் பதப்படுத்தும் தொட்டி மற்றும் மேற்கூரை அமைக்கும் பணி | 9.25 |
| 4 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு வார்டு எண்–1 நித்தியவனம், வார்டு எண்–2 வீரம்மாள் நகர், தபசி நகர், பாலாஜி நகர், வார்டு எண்–6 இரணியன் நகர், வார்டு எண்–16 தேசாதி கதிர்வேல் தெரு, வார்டு எண்–18 VNS நகர், வார்டு எண்–20 கணபதி நகர், வார்டு எண்–23 ஜம் ஜம் நகர் மற்றும் வார்டு எண்– 21 சாய்பாபா கார்டன், பாப்பையா நகர் ஆகிய இடங்களில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி. | 10.00 |
| | கூடுதல். | 54.25 |

அலுவலக குறிப்பு– 1. அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணிகளுக்ககான செலவீனத்தை 15 வது மத்திய நிதி குழு (15CFC) திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்–3536/2020 /இ1

நகர்மன்ற தீர்மான எண்–557
நாள்.23.12.2020
அனுமதிக்கப்படுகிறது.

பொ ருள் ண்-4

சீர்காழி நகராட்சிக்குட்பட்ட வடக்கு மடவிளாகம் நகராட்சி மேல்நிலை பள்ளி மற்றும் ஊழியகாரன் தோப்பு நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகியவற்றின் தலைமை ஆசிரியர்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கேட்டுகொண்டதற்கு இணங்க நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேராய்வு மேற்கொண்டு பராமரிப்பு பணிகள் செய்திட அறிவுறுத்தியதன் பெயரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ .5.00 இலட்சத்தை கல்வி நிதி இன் கீழ் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்–3336/2020/இ1)

நகர்மன்ற தீர்மான எண்–558
நாள்.23.12.2020
அனுமதிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பொருள் எண்-5 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட தாடாளன் மேல வீதி நகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் புளிச்சக்காடு நகராட்சி தொடக்கப் பள்ளி ஆகியவற்றின் தலைமை ஆசிரியர்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கேட்டுகொண்டதற்கு இணங்க நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேராய்வு மேற்கொண்டு பராமரிப்பு பணிகள் செய்திட அறிவுறுத்தியதன் பெயரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தை கல்வி நிதி இன் கீழ் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–3334/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–559 நாள்.23.12.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-6 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட கோவில்பத்து நகராட்சி தொடக்கப் பள்ளி , பனமங்களம் நகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் துறையூர் நகராட்சி தொடக்கப் பள்ளி ஆகியவற்றின் தலைமை ஆசிரியர்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கேட்டுகொண்டதற்கு இணங்க நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேராய்வு மேற்கொண்டு பராமரிப்பு பணிகள் செய்திட அறிவுறுத்தியதன் பெயரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தை கல்வி நிதி இன் கீழ் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–3292/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–560 நாள்.23.12.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-7 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பனங்காட்டாங்குடி ரோடு நகராட்சி நடுநிலைப் பள்ளி மற்றும் கீழதென்பாதி நகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் துறையூர் நகராட்சி தொடக்கப் பள்ளி ஆகியவற்றின் தலைமை ஆசிரியர்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கேட்டுகொண்டதற்கு இணங்க நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேராய்வு மேற்கொண்டு பராமரிப்பு பணிகள் செய்திட அறிவுறுத்தியதன் பெயரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ .5.00 இலட்சத்தை கல்வி நிதி இன் கீழ் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–3478/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–561 நாள்.23.12.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-8 | சீர்காழி நகராட்சியில் எரிவாயு தகன மேடை 2008–2009 ஆம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைநிலை திட்டம் , பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டம் , சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் மற்றும் பொது நிதி திட்டத்தின் கீழ் ஈசான்ய தெரு சுடுகாட்டில் நவீன எரிவாயு தகன மேடை கட்டப்பட்டு சீர்காழி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் மற்றும் நகராட்சியை சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள பொதுமக்களுக்கு 09.03.2015 முதல் பயன்பாட்டில் உள்ளது தற்போது நவீன எரிவாயு தகன மேடை கட்டப்பட்டு 5 வருடங்களுக்கு மேல் ஆகிய நிலையில் எரியூட்டு இயந்திரத்தில் அமைந்துள்ள புகை போக்கியில் புகை வெளியேறும் குழாய் சேதமடைந்து விழுந்துவிட்டது . மேலும் அதிலுள்ள இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும் எரிவாயு தகன மேடை அமைந்துள்ள இடத்தைச் சுற்றி குடியிருப்புகள் அமைந்துள்ளதால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படாமலும் மற்றும் காற்று மாசுபடாமல் தடுக்கவும் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் நேராய்வில் அப்பகுதி பொதுமக்களின் நலக் கருதி உடன் பராமரிப்பு பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதன் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.95 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை வேறு ஏதேனும் திட்ட நிதியில் கிடைக்கும்பட்சத்தில் அதனை ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–3357/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–562 நாள்.23.12.2020 அனுமதிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| பொ<br>ருள்<br>ண்-9 | சீர்காழி நகராட்சியில் SBM திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ள பேட்டரியினால் இயங்கும் சிறிய வாகனங்கள் 16 எண்ணிக்கை (BOV) பராமரிப்பு செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 7220/2020/P3 நாள் 09.07.2020 இன் படி அறிவுறுத்தியதன் பெயரில் சீர்காழி நகராட்சியில் உள்ள பேட்டரியினால் இயங்கும் சிறிய வாகனங்களை பராமரிப்பு செய்து வீடுகள் தோறும் குப்பைகளை நேரடியாக பிரித்து வாங்கிட ஏதுவாக நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் அறிவுரையின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்தை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை சேவை கட்டண நிதியின் கீழ் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–3379/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–563<br>நாள்.23.12.2020<br>அனுமதிக்கப்படுகிறது. |
| பொ<br>ருள்<br>ண்-10 | சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொது பிரிவு, வருவாய் பிரிவு, வரிவசூல் மையம் உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் உள்ள பணியாளர்களுக்கு உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்த நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அறிவுறுத்தியதன் பெயரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–1581/2020/இ1)<br>சீர்காழி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உட்கட்டமைப்பு , கழிவறை மற்றும் குடிநீர் வசதி ஆகியவற்றிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேராய்வு செய்து பராமரிப்பு செய்திட அறிவுறுத்தியதன் பெயரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–3224/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–564<br>நாள்.23.12.2020<br>அனுமதிக்கப்படுகிறது. |
| பொ<br>ருள்<br>ண்-11 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் உள்ள இயந்திரங்கள் பழுது ஏற்பட்டுள்ளதை சரிசெய்திடவும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் பணி மேற்கொள்ள நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அறிவுறுத்தியதன் பெயரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–3252/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–565<br>நாள்.23.12.2020<br>அனுமதிக்கப்படுகிறது. |
| பொ<br>ருள்<br>ண்-12 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையம், கீழ தென்பதி, நங்கநலத் தெரு, வடம்போக்கி சந்து மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் உள்ள கழிவறைகள் பழுதடைந்துள்ளதை தொடர்ந்து பராமரிப்பு பணி மேற்கொள்ள நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேராய்வு செய்து பராமரிப்பு செய்திட அறிவுறுத்தியதன் பெயரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–3253/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–566<br>நாள்.23.12.2020<br>அனுமதிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| பொ ருள் ண்-13 | சீர்காழி நகராட்சி அலுவலக வளாகத்தில் பணியாளர்களுக்கு புதியதாக கழிவறை அமைக்க நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர்அறிவுறுத்தியதன் பெயரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–3250/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–567 நாள்.23.12.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொ ருள் ண்-14 | சீர்காழி நகராட்சியில் புளிச்சக்காடு பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்துள்ள 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியை இடித்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளதை நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேராய்வு செய்து பொது மக்களுக்கு இடையூராக உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியை இடித்து அப்புறப்படுத்திட அறிவுறுத்தியதன் பெயரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.50 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–3205/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–568 நாள்.23.12.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொ ருள் ண்-15 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2020–2021 ஆம் ஆண்டிற்கான தெருக்களில் உள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதை சரிசெய்திடவும் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோக மின் மோட்டார்களை பராமரிப்பு செய்திடவும் பொது மக்களின் நலன் கருதியும், குடிநீர் வீணாகாமல் தடுத்திடவும் மற்றும் தொற்று நோய்கள் வராமல் தடுத்திடவு நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் அறிவுரையின் படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,00,000/– ஐ நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–3380/2020/இ1) | நகர்மன்ற தீர்மான எண்–569 நாள்.23.12.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொ ருள் ண்-16 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், நகராட்சி அலுவலகம், பூங்கா, சித்தமல்லி தலைமை நீர்ரேற்று நிலையம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கட்டிடங்களிலும் ஆகிய இடங்களில் உள்ள மின் உபகரனங்கள் நகராட்சி பராமரிப்னில் இயங்கி வருகிரது. அதற்குன்டான மின் உபகரன பொருட்கள் இருப்பில் இல்லாததால் நகராட்சி மின் கம்பியாளரின் குறிப்பு, நாள்–11.12.2020 இன் படி நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் அறிவுறையின் படி ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலம் கொள்முதல் செய்திடவும், நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்–3208/2020/இ1 | நகர்மன்ற தீர்மான எண்–570 நாள்.23.12.2020 அனுமதிக்கப்படுகிறது. |
| பொ ருள் ண்-17 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட 24 வாடுகளில் உள்ள கைபம்புகள், பொது குழாய்கள், சிறு மின் விசை பம்புகள், புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், நகராட்சி அலுவலகம், பூங்கா மற்றும் நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கட்டிடங்களிலும் குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அதற்கான உபகரனங்கள் இருப்பில் இல்லாததால் நகராட்சி பம்பு தெக்கானிக் குறிப்பு, நாள்–11.12.2020 இன் படி நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் அறிவுறையின் படி ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலம் கொள்முதல் செய்திடவும், நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்–3291/2020/இ1 | நகர்மன்ற தீர்மான எண்–571 நாள்.23.12.2020 அனுமதிக்கப்படுகிறது. |

**பொ ருள் ண்-18**

சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்கா, T.T பிள்ளை பூங்கா, முருகன் பூங்கா மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் விவரப்படி தினசரி நாளிதழ்கள் விநியோகம் செய்யப்பட்டதற்கான பட்டியல் கீழ் கண்டவாறு.

| வ.எண் | மாதம் / ஆண்டு | தினசரி நாளிதழ் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | ஏப்ரல்–2019 முதல் ஏப்ரல்–2020 வரை | மாலை முரசு | 3930.00 |
| 2 | ஜனவரி–2019 முதல் மே–2020 வரை | தினத்தந்தி | 7980.00 |
| 3 | ஜனவரி–2019 முதல் மே–2020 வரை | தினமலர் | 9303.00 |
| 4 | ஏப்ரல்–2019 முதல் மே–2020 வரை | தினகரன் | 6639.00 |
| 5 | ஜனவரி–2019 முதல் மே–2020 வரை | தினமணி | 7238.00 |
| 6 | ஜனவரி–2019 முதல் மே–2020 வரை | மாலை மலர் | 5170.00 |
| | | கூடுதல் | 40260.00 |

மேற்படி நாளிதழ்கள் விநியோகம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.40260/– ஐ நகராட்சி பொது நிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்–6272/2006/இ1

நகர்மன்ற தீர்மான எண்–572 நாள்.23.12.2020 அனுமதிக்கப்படுகிறது.

**பொ ருள் ண்-19**

சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் திட்ட பணியில் பயன்பாடு இன்றி உடைந்த நிலையில் இருக்கும் சுமார் 2 டன்கள் இரும்பு கொருட்களை உத்தேசமாக பழைய பொருட்களின் சந்தை மதிப்பு ரூ.40000/– ற்க்கு நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் அறிவுறையின் படி மேற்படி பொருட்களை ஏலத்தில் விடுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

நகர்மன்ற தீர்மான எண்–573 நாள்.23.12.2020 அனுமதிக்கப்படுகிறது.

(ஒம்)முன்னிலை. திருமதி .P.தமிழ்ச்செல்வி.BA
தனி அலுவலர் (ம) ஆணையர்,
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–23.12.2020

/உண்மை நகல்/

ஆணையர்,
சீர்காழி ந கராட்சி.